செ.வெ.எண்:81/2019 நாள்:30.10.2019

**பத்திரிக்கைச் செய்தி**

**சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது,**

சிவகங்கை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 16.10.2019 முதல் துவங்கப்பட்டுள்ளது. இதுவரை 204 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. கடந்தாண்டை ஒப்பிடுகையில் கடந்தாண்டில் (அக்டோபர், நவம்பர், டிசம்பர்) மூன்று மாதத்தில் 259 மி.மீட்டர் மழை மட்டுமே பெய்துள்ளது. இந்தாண்டு பலமடங்கு அதிகரித்து 16 நாட்களில் இவ்வளவு மழை பெய்துள்ளது. அதன்மூலம் அனைத்து நீர்நிலைகளிலும் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, குடிமராமத்துப் பணி துவக்கப்பட்டு மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி பணிகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டு இதுவரை 110 பொதுப்பணித்துறை கண்மாய்களும், ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் 500 குளங்கள், 2500 ஊரணிகள் தூர்வாரப்பட்டு கரைகள் பலப்படுத்தப்பட்டதுடன் கலுங்கு மற்றும் மடைகள் சீர்செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி ஒவ்வொரு கண்மாய்க்கும் வரக்கூடிய வரத்துக்காய்கள் சீர்செய்யப்பட்டுள்ளதால் தற்பொழுது பெய்து வரும் மழையால் அனைத்து தண்ணீரும் சேதாரமின்றி கண்மாய்களுக்கு வருகின்றன.

மேலும், தென்மேற்கு பருவமழையின் (ஜுன் - செப்டம்பர்) போது நடப்பாண்டில் 489 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. கடந்தாண்டு (2018) 308 மி.மீட்டர் அளவுதான் மழை பெய்தது. நடப்பாண்டிற்கு ஒப்பிடுகையில் கடந்தாண்டை விட இந்த ஆண்டு 181 மி.மீட்டர் மழை கூடுதலாக பெய்துள்ளது. மழையை பொறுத்த வரை கடந்தாண்டை விட இந்தாண்டு சிவகங்கை மாவட்டத்தில் நன்றாக மழை பெய்து வருகிறது. தற்பொழுது பேரிடர் மேலாண்மையின் மூலம் அதிக அளவு மழை பெய்யக்கூடிய மாவட்டங்களில் சிவகங்கை மாவட்டமும் உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 9 வட்டத்திலும் 63 அலுவலர்கள் கொண்ட குழு அதாவது ஒவ்வொரு குழுவிலும் 7 துறைகள் சார்ந்த அலுவலகர்கள் பணியாற்றும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு ஊராட்சிப் பகுதியிலும் ஊராட்சி செயலர், கிராம உதவியாளர் தினந்தோறும் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதுடன் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டாட்சியர்கள் அவ்வப்போது கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு மழையால்

ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால் உடனடியாக நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், கண்மாய்கள், குளங்கள் அதிகளவு நீர் தேங்கும் போது உடைப்பு ஏற்படாமல் கண்காணிப்பதுடன் போதிய அளவு மணல் மூட்டைகளும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் உணவுப் பொருட்கள் பொதுமக்களுக்கு தேவையான அளவு வழங்கும் வகையில் நியாயவிலைக் கடைகளில் தேவையான அளவு இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. தண்ணீர் அதிகளவு தேங்கும் பகுதியை கண்டறியப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் தங்குவதற்காக மண்டபங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டதுடன் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளும் வகையில் ஜேசிபி இயந்திரங்கள் தயார்நிலையில் உள்ளன. பொதுவாக, நமது மாவட்டத்தைப் பொறுத்தவரை குடிமராமத்துப் பணியில் சரியான முறையில் பணிகளை மேற்கொண்டு கரைகளை பலப்படுத்தியதால் அதிக அளவில் நீர்தேக்கம் செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் இயங்கும் வகையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் புகார் மற்றும் தகவல் தெரிவிக்க விரும்புவோர் 04575- 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்கள் பகுதியின் நிலைமைகளை உடனுக்குடன் தெரிவிக்கலாம் மேலும் கீழ்கண்ட

| **வட்டாட்சியர் அலுவலகம்** | **கைப்பேசி எண்** |
|---|---|
| சிவகங்கை | 9445000650 |
| மானாமதுரை | 9445000651 |
| இளையான்குடி | 9445000652 |
| திருப்பத்தூர் | 9445000647 |
| காரைக்குடி | 9445000648 |
| தேவகோட்டை | 9445000649 |
| காளையார்கோவில் | 9443649175 |
| திருப்புவனம் | 9486073577 |
| சிங்கம்புணரி | 9943123146 |

கைப்பேசி எண்களில் மழை குறித்த புகார்களை அந்தந்த வட்டாட்சியர்களிடமும் பொதுமக்கள் தொடர்பு கொள்வதன் மூலம் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பாதிப்புப் பகுதிகளுக்கு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள இதுபோன்ற தகவல்கள் மிகப்பயனுள்ளதாக இருக்கும். அதேபோல் மாவட்ட நிர்வாகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் உடனுக்குடன் வழங்கி வருகின்றது. மேலும் அவ்வப்போது ஏற்படும் பாதிப்புகளுக்கு உள்ள நிவாரணம் ஒருசிலமணி நேரத்திற்குள் வழங்கிட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளன. எனவே கனமழை தொடர்பான அச்சங்களுக்கு பொதுமக்கள் யாரும் பயப்பட வேண்டாம். மாவட்ட நிர்வாகம் பாதுகாப்பு பணியில் முழுக்கவனம் எடுத்து பணிகள் மேற்கொண்டு வருகின்றது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**::வெளியீடு::**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,சிவகங்கை.**